DECEMBER 2022 **P/ID 35325/PTL3R**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. வ.வே.சு ஐயரின் ஒப்பிலக்கியப் பணியினை எழுதுக.

2. ஒப்பிலக்கிய ஆய்வினை அறிவியல் நெறிமுறைப்பட்ட ஆய்வு என அழைக்கப்படக் காரணமென்ன?

3. 'ஒப்பிலக்கியம்' என்ற தொடரை முதன்முதலில் பயன்படுத்தியவர் யார்?

4. இலக்கிய வகை குறித்து எழுதுக.

5. திருப்பாவையோடு ஒப்பிடத்தக்க சைவ இலக்கிய நூல் எது?

6. ஒப்பிலக்கியப் பணி செய்த ஐரோப்பிய தமிழ் அறிஞர்களைக் குறிப்பிடுக.

7. பொதுமை இலக்கியம் என்றால் என்ன?

8. தென்னிந்தியாவில் வழங்கும் மொழிகளைத் திராவிட மொழிகள் எனப் பெயரிட்டு அழைத்தவர் யார்?

9. அடிக்கருத்தியல் என்றால் என்ன?

10. கங்கையும் காவிரியும் என்னும் ஒப்பிலக்கிய நூலின் ஆசிரியர் யார்?

11. தேசிய இலக்கியம் என்றால் என்ன?

12. க. கைலாசபதி எழுதிய ஒப்பிலக்கிய நூல்கள் யாவை?

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. Comparative literature என்ற சொல்லின் தோற்றம் குறித்து எழுதுக.

14. பிரெஞ்சுக் கோட்பாடு குறித்து விளக்குக.

15. ஒப்பிலக்கிய ஆய்வின் பயன்களை எடுத்துரைக்க.

16. வாய்மொழி இலக்கியம் - வரிவடிவ இலக்கியம் ஒப்பிட்டு ஆய்க.

17. ஒருமொழி இலக்கிய ஒப்பீடு குறித்து எழுதுக.

18. வீரயுகப் பாடல்களின் பண்பினை எடுத்தியம்புக.

19. புராணங்கள் மற்றும் தொன்மங்கள் குறித்து விளக்குக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. தமிழ் ஒப்பிலக்கிய வளர்ச்சி நிலையினை விவரி.

21. நான்கு வகையான இலக்கியப் பார்வையினைக் கட்டுரைக்க.

22. இலக்கியத்தில் அறிவியல் பெறுமிடத்தை மதிப்பிட்டு ஆய்க.

23. ஒப்பிலக்கிய ஆய்வின் பயனாகத் தமிழ் இலக்கியங்கள் உலக அளவில் சிறப்புறுமாற்றைச் சான்றுகாட்டி நிறுவுக.

24. கம்பராமாயணம் - வால்மீகி இராமாயணம் ஒற்றுமை, வேற்றுமைகளை ஒப்பிட்டு ஆய்க.

———————